**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 43/2021**

**connected with 44/2021**

2024- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25– ஆம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW2 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | குமாரசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | நன்னை | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 72/2024 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1) நான் ஊரில் திருமணமாகாதவர்களுக்கு பெண் மற்றும் மாப்பிள்ளை பார்த்துக் கொடுக்கும் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கும் வாதியின் தம்பிக்கும் கிரிமினல் வழக்கு நடைபெற்றது என்றாலும், மேற்படி வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் சரிதான். எனக்கு வைத்தியநாதபுரம் – பெருமத்தூர் (எறையூர் சர்க்கரை ஆலை) சாலையில் மின்சார வாரியத்திற்கு அருகில் கிழக்கு பக்கமாக நிலம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஆண் பிள்ளைகள் கிடையாது. (இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளார்கள்). தாவா சொத்திற்கு ஏதாவது தேவையிருந்தால் தான் நான் செல்வேன் என்றால் சரிதான்.

2) நான் தாவா சொத்திற்கு சென்று 10, 15 ஆண்டுகள் ஆகியிருக்குமா என்றால் இல்லை. 2 வருடத்திற்கு முன்பு காதணி விழாவிற்காக அங்குள்ள கோவிலுக்கு சென்ற வந்தேன். ஓடைக்கு மேற்கு பகுதியில் வாதியின் நிலம் உள்ளது என்றாலும், ஓடைக்கு கிழக்கு பகுதியில் தான் கோவில் உள்ளது என்றாலும் சரிதான். யாருடைய வீட்டு காதணி விழாவிற்காக நான் சென்றேன் என்றால் எனக்கு தெரியாது. கிழக்கு பகுதியில் உள்ள ஓடையில் மழைகாலங்களில் தண்ணீர் வந்துக் கொண்டிருக்கும் என்றால் சரிதான். 6 மாதங்கள் தண்ணீர் இருக்குமா என்றால் 1 மாதம் அல்லது 1 1/2 மாதங்கள் தண்ணீர் இருக்கும். மேற்படி ஆற்று மணலில் வண்டி ஓட்ட முடியுமா என்றால் ஓட்ட முடியும்.

3) தாவா சொத்திற்கு மேற்கில் வாரி உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் ஒரு கஜம் (3 அடி அகலம்) இருக்கும். அதில் வண்டிகள் எதுவும் செல்லமுடியாது. அந்த பாதை வைத்தியநாதபுரத்தில் இருந்து நன்னை வரை இருக்குமா என்றால் இருக்கும். ஒத்தையடிப்பாதையாக உள்ளது. நன்னையில் இருந்து

DM Civil Court, Kunnam

வாதியின் நிலத்திற்கு ஒத்தையடிப்பாதையின் வழியாக தான் சென்று வர வேண்டுமென்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் 15 செண்ட் இருக்கும். தாவா சொத்திற்கு நான் 2 வருடத்திற்கு முன்பு சென்ற போது அங்கு குட்டை இருந்தது. அங்கிருந்த இழுப்பை மரம் விழுந்துவிட்டது.

4) தாவா சொத்திற்கும், பிரதிவாதி இடத்திற்கும் இடையில் யார் இடம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னை யார் சாட்சி சொல்ல அழைத்து வந்தார்கள் என்றால் ராமசாமியின் மகன் அழைத்து வந்தார். அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்திற்கும், பிரதிவாதி இடத்திற்கும் இடையில் வண்டிபாதை உள்ளதா என்றால் உள்ளது. அது எத்தனை அடி அகலம் உள்ளது என்றால் 12 அடி அகலம் உள்ளது. ராமசாமியின் மகனுக்கு கேணி எங்குள்ளது என்றால் தாவா சொத்திற்கும், ராமசாமி மகன் இடத்திற்கும் இடையில் உள்ளது. அது எத்தனை அடி அகலம் என்றால் 30 அடி நீளம், 30 அடி அகலம் இருக்கும். அதை நான் நன்றாக பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன்.

5) சின்னு யார் என்றால் பெருமாள் என்பவரின் மகன் ஆவார். ராமசாமிக்கு அண்ணன் இருக்கிறாரா என்றால் பெருமாளும் ராமசாமியும் மட்டுமே அண்ணன் தம்பிகள் ஆவார். வேறு யாரும் இல்லை. பெருமாள் எந்த வழியாக செல்வார் என்றால் இதே வழியாக தான் அவரும் செல்வார். பெருமாள் மகன் சின்னு நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியளித்த விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்தான 12 அடி பாதை எப்போது போடப்பட்டது என்றால் அது பிரிட்டிஷார் காலத்திலேயே போடப்பட்டது. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6) மேற்படி எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரச்சனைக்குரிய தரிசு புறம்போக்கு நிலத்தை பாதையாக பயன்படுத்தி கொள்ளும் பொருட்டு 2005–ல் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ராமசாமி மேற்படி தரிசு புறம்போக்கு நிலத்தை வாதிக்கு அடமானம் கொடுக்கக்கூடாது என்றும், அவ்வாறு கொடுத்தால் இந்த பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலங்களுக்கு சென்று வர பாதை இல்லாமல் போய்விடும் என்று வருவாய் துறையினரிடம் 1ம் பிரதிவாதி ராமசாமி ஆட்சேபணை தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ராமசாமி ஆட்சேபணை தெரிவித்த போது நான் உடன் சென்றேனா என்றால் ஆமாம். நானும் சென்றிருந்தேன். எத்தனை வருடங்களுக்கு முன்பு எத்தனை தடவை விசாரணைக்கு சென்றோம் என்றால் சுமார் 10 – 15 வருடங்களுக்கு முன்பு 2, 3 முறை விசாரணைக்காக சென்றிருப்போம்.

7) நான் ஆர்.டி.ஓ–விடம் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆர்.டி.ஓ 2005–ல் உத்தரவு போடுவதற்கு முன்பும் அந்த இடத்தில் பாதை இருந்ததா என்றால் பாதை இருந்தது. 2005–ல் உத்தரவு போட்டதற்கு பிறகு ஆர்.டி.ஓ. மற்றும் வி.ஏ.ஓ. வந்து இடத்தை பார்வையிட்டார்கள். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. ராமசாமி, பெருமாள் ஆகியோர் பாகம் செய்துக் கொண்ட விபரம்

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் தாவா சொத்திற்கு நான் வர வேண்டுமென்ற அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காதணி விழாவிற்கு கோவிலுக்கு சென்றதாக சொல்வது பொய் என்றாலும், அவ்வாறு கோவில் இருந்திருந்தால் அதன் பெயரை நான் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு கோவில் இல்லாததால் தான் நான் கோவில் பெயரை குறிப்பிட முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8) தாவா சொத்தை நான் பார்த்திருந்தால் பிரதிவாதி நிலத்திற்கு மேல்புறம் 30 அடி பாதை உள்ளது அதை தான் அவர் பயன்படுத்தி வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், உப்பிலாமணி தம்பிக்கு ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் ஆற்று மணலில் வண்டி எதுவும் செல்லாது என்றாலும் அங்கு 6 மாத காலம் வரை தண்ணீர் இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. ராமசாமியின் உடன் நான் இருப்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC Court, Kunnam